www.tamilarangam.net

# உங்கள் விசிட்டர்

**ஈழ விடுதலை அமைப்புகளில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எப்)யும் ஒன்றாகும். இந்த அமைப்பு மக்கள் விடுதலைப் படை (பி.எல்.ஏ) என்ற ராணுவப் பிரிவின் மூலம் சிங்கள ராணுவத்தினை எதிர்த்துப் போராடி வருகின்றது. பி.எல்.ஏ ராணுவத்தின் தளபதி சுரேஷ். இவர் சமீபத்தில் சென்னை வந்திருந்தார். அவரை விசிட்டர் பேட்டி கண்டார்.**



*விசிட்டர்:* தனித்தனி அமைப்புக்களாக தளங்களில் நின்று சிங்கள ராணுவத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும் போராளிகளின் ராணுவ அமைப்புக்கள், ஒன்றுபட்டு சிங்கள ராணுவத்தை எதிர்க்க வேண்டிய தருணம் இதுதான். இந்தக் கருத்தில் உங்கள் (பி.எல்.ஏ) மக்கள் விடுதலைப் படையின் நிலை என்ன?

*சுரேஷ்:* ஈ.பி.ஆர்.எல்.எப்.ஐ பொறுத்தவரை குறைந்தபட்ச வேலைத் திட்டத்தின் அடிப்படையிலாவது அமைப்புக்களிடையே ஒற்றுமை உருவாக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் தொடர்ந்து நாங்கள் ஒற்றுமைக்கு அழைப்பு விட்டே வந்திருக்கின்றோம். இயக்கங்களிடையேயும் ஒற்றுமை உருவாக வேண்டும் என்பதற்காக ஈ.பி.ஆர்.எல்.எப் கடந்த காலத்தில் இருந்தே முயன்று வருகிறது. எங்கள் இயக்கத்தின் மீது எல்.டி.டி.ஈ தாக்குதல்களைத் தொடர்ந்த பொழுது, இழப்புக்களை ஏற்படுத்திய போது கூட நாங்கள் பொறுமையை கடைப்பிடித்தே வந்திருப்பதும் இந்த அடிப்படையில்தான். அரசியல் ரீதியாகவும், ராணுவ ரீதியாகவும், டி.யு.எல்.எப் முதல் அனைத்து இயக்கங்களிடையேயும் ஒற்றுமை உருவாக வேண்டும் என்பதும் எங்கள் நிலை. ஒற்றுமை வலுப்படுவதன் மூலமே சிங்கள ராணுவத்தை விரட்ட இயலும் என்பதும் உண்மைதான்.

*விசிட்டர்:* சிங்கள ராணுவத்தின் மோசமான தாக்குதல் உங்கள் ராணுவத்தைச் சோர்வடையச் செய்தது உண்டா?

*சுரேஷ்:* லட்சியப்பற்றோடு, ஈழ மக்கள் விடுதலைக்காக நாங்கள் போராடுகின்றோம். எங்கள் எதிரியை எந்த நோக்கத்திற்காக எதிர்க்கின்றோம் என்பதை அரசியல் ரீதியாகவும் எங்கள் போராளிகள் உணர்ந்திருப்பதால் தளங்களில் நிற்கும் போது அவர்கள் எந்த சூழ்நிலையிலும் சோர்வடைவதில்லை. மாறாக மண்ணை நேசிப்பதனாலும், சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புவதனாலும் உற்சாகமே ஏற்படுகிறது.

*விசிட்டர்:* உங்கள் ராணுவப் பிரிவில் இருக்கும் போராளிகளுக்கு அரசியல் பயிற்சியும் அளிக்கப்படுகிறதா?

*சுரேஷ்:* ஒரு போராளி இயக்கத்திற்கு வரும் தொடக்க காலம் தொட்டு அவருக்கு அரசியல் கல்வி அளிக்கப்படுகிறது. எந்த நோக்கத்திற்காக அவர்கள் ஆயுதங்களை எடுக்கிறார்கள் என்பதை முற்றிலுமாக அவர்கள் உணர்ந்த பிறகே அவர்களிடம் ஆயுதங்களை கொடுப்பதனால் தவறு செய்யும் வாய்ப்புகள் மிகவும் குறைகின்றது. எதிரி எவ்வளவு பலமுடையவனாக இருந்தாலும் இறுதி வெற்றி எங்களுக்கே என்ற நம்பிக்கை உணர்வும் அவர்களுக்கு ஏற்படுகிறது.

*விசிட்டர்:* ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ மக்கள் விடுதலை படை என்று செயல்படுகின்ற உங்களை 'ஈழ மக்களுக்கானவர்கள்' என்று எப்படிச் சொல்கிறீர்கள்?

*சுரேஷ்:* பல உதாரணங்களைக் கூற முடியும். குறிப்பாக கேட்பதானால், ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன். வாசவிளான் என்ற இடத்தில் சிங்கள ராணுவம் முகாம் அமைத்து விட்டது. அந்தப் பகுதி மக்கள் சிங்கள ராணுவ முகாம் அருகில் போராளிகள் சென்ட்ரி போட வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றார்கள். அந்தக் கிராமத்தில் உள்ள 90 குடும்பங்களும் ஒன்றாக எங்கள் ராணுவமே சென்ட்ரி போட வேண்டும் என்று முடிவு செய்து; அதை மனுவாக எழுதி எங்களிடம் கொடுத்துப் பாதுகாப்புத் தரக் கேட்டார்கள். எங்கள் ராணுவத்திற்கான உணவு, குடிநீர் போன்ற உதவிகளையும் அந்த மக்களே செய்து தந்தார்கள். மக்கள் கோரிக்கையை ஏற்று செயல்படும் இயக்கமும் ராணுவப் பிரிவும் எங்களுடையது என்று பலரும் கூறுவது இதன் அடிப்படையில் தான்.

*விசிட்டர்:* உங்கள ராணுவத்தை எதிர் நோக்கியுள்ள பிரச்னை என்ன?

*சுரேஷ்:* நன்கு பயிற்றுவிக்கப்பட்ட போராளிகளும், ஆயுதங்களும் உள்ள எங்கள் பி.எல்.ஏ ராணுவ பிரிவு தளங்களில் இரண்டு எதிரிகளை ஒரே நேரத்தில் சந்திக்க வேண்டி உள்ளது. நேர் எதிரில் சிங்கள ராணுவத்தை சந்திக்கும் எங்கள் போராளிகளை, மறைமுகமாக அழித்தொழிக்க எல்.டி.டி.ஈ ஆயுதங்களை தூக்கிக் கொண்டு வருகின்றது. யாழ்குடா நாட்டில் யாழ்ப்பாண நகரத்தை சுற்றி வளைத்து தாக்கிட, நாளுக்கு நாள் சிங்கள ராணுவம் முன்னேறி வருவது உண்மைதான். நெருக்கடியான இந்த





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடுகள்

www.tamilarangam.net

# "இரண்டு எதிரிகளை எதிர்த்து போராடுகிறோம்!"

## –ஈ.பி.ஆர்.எல்.எப் ராணுவ தளபதி சுரேஷ் கூறுகின்றார்!

நேரத்தில் நாங்கள் மறைமுகமாக செயல்பட வேண்டி உள்ளது. இதற்குக் காரணம் மேற் சொன்ன விபரங்களே யாகும்.

விசிட்டர்: உங்கள் பி.எல்.ஏ ராணுவத்தை முற்றாக எல்.டி.டி.ஈ முறியடித்து விட்டதாகக் கூறப்படுகிறதே?

சுரேஷ்: உண்மைக்கு மாறாக தகவல்களை மக்கள் முன் வைப்பது என்பது எல்.டி.டி.ஈ இயக்கத்தின் பிரச்சார முறை. யாழ்குடா நாட்டில் நாங்கள் சிங்கள ராணுவத்தின் எதிரில் நின்ற பொழுது மறுபுறத்தில் எங்களைத் தாக்கி அழிக்க எல்.டி.டி.ஈ முயன்றது. ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. எங்கள் இயக்கத் தோழர்களில் சிலரை மட்டுமே சிறை பிடித்து விட்டார்கள்.

கொள்கைப் பிடிப்போடு, மக்கள் விடுதலையை நேசித்து உயர்ந்த எங்கள் இளைஞர்களை வைமன் ரோடில் உள்ள எல்.டி.டி.ஈ ராணுவ விசாரணை முகாமில் அடைத்து மிருகத்தனமான சித்ரவதை செய்து அவர்களைத் திரும்பவும் செயல்பட முடியாமல் சிதைத்து வெளியே அனுப்புகிறார்கள். கை, கால்களை சேதப்படுத்தி அவர்களால் வெளியே அனுப்பப்படும் போராளிகள் வெளிவந்த பிறகும் மிரட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு ஓடச் சொல்லி துன்புறுத்துகின்றார்கள்.

ஸ்ரீலங்கா அரசின் சித்திரவதை முகாமான பூசா முகாமிற்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல எல்.டி.டி.ஈ இயக்கத்தின் சித்ரவதை முகாம் என்று எங்கள் மக்களே சொல்கிறார்கள்!

விசிட்டர்: உங்களை(சுரேஷ்)க் கூட சிறை பிடித்து கொன்று விட்டதாக தகவல் ஒன்று வந்ததே?

சுரேஷ்: எல்.டி.டி.ஈ தான் அப்படி அறிவித்தது. அதற்கு என்ன காரணம் என்று நானே கூறுகிறேன். டெலோ இயக்க வீரர்களை அழித்த பிறகு; அவர்களின் அடுத்த குறி நாங்கள் தான். டெலோ கிரிமினல் இயக்கம், எனவே அழித்தோம் என்றார்கள். எங்களை என்ன காரணம் சொல்லித் தாக்குவது என்ற நிலை ஏற்பட்ட பொழுது; அவர்களுக்கு காரணம் தேவைப்பட்டது. இந்திய அரசின் ஆதரவாளர்கள் நாங்கள் என்றார்கள். எங்களால் தான் பின்னடைவுகள் என்று கூறிப் பார்த்தார்கள்.

பிறகு என்னைச் சிறை பிடித்ததாகவும்; என்னை விசாரித்த பொழுது என்னிடமிருந்து ரகசிய கடிதங்கள் சிக்கியதாகவும், அந்தக் கடிதங்களில் நாங்கள் எல்.டி.டி.ஈ இயக்கத்தை அழிக்கப் போட்ட திட்டங்களும் தடயங்களும் சிக்கியதனால் அதன் அடிப்படையில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தை தாக்குகின்றோம். சுரேஷ் கொலை செய்யப்பட்டார் என்றார்கள். நான் உயிரோடு

உங்கள் எதிரில் இருப்பது எவ்வளவு உண்மையோ; அதே போல் எங்கள் ராணுவ அமைப்பு செயல்படுவதும் உண்மையே!

விசிட்டர்: சிங்கள ராணுவம் முன்னேறுவது குறித்து உங்கள் மதிப்பீடு என்ன?

சுரேஷ்: எல்.டி.டி.ஈ பிற ராணுவ அமைப்புகளிடம் நடந்து கொண்ட அணுகுமுறை தான் களத்தில் முன்னேற்றத்திற்கு வழி வகுத்து விட்டது. நேரில் டெலோ இல்லை, பிளாட் இல்லை, ஈ.பி.ஆர்.எல்.எப் இல்லை. எனவே சிங்கள ராணுவத்திற்கு உண்மையான பயம் போய்; தனித்து நிற்கும் எல்.டி.டி.ஈ ராணுவத்தைத் தாக்கி அழித்து விடலாம் என்ற தைரியம் பிறந்து விட்டது.

பிற இயக்கங்களை நடமாட விடாமல் எல்.டி.டி.ஈ தடுத்ததனால் வவுனியா, முல்லைத் தீவு, கிளி நொச்சி, மன்னார் பகுதிகளை சுலபமாக சிங்கள ராணுவம் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்து யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறுகிறது.

விசிட்டர்: நெருக்கடியான நேரத்தில் மறைமுகமாக வாவது நீங்கள் சிங்கள ராணுவத்தை எதிர்க்கலாம் அல்லவா?

சுரேஷ்: காரணம் சொல்லி தப்பிக்க விரும்பவில்லை. சில இடங்களில் நாங்களும் செயல்பட்டே (எதிர்த்தே) வருகிறோம். மும்முரமாக எங்கள் தாக்குதல் யாழ்குடா பகுதியில் இல்லை என்பது வரை சரி. பிற இயக்கங்களை எல்.டி.டி.ஈ தடுத்ததன் மூலம், போராளிகள் ராணுவங்கள் மூவ்மெண்ட்ஸைத் தடை செய்யும் வகையில் கேந்திரமான சில ராணுவ முகாம்களை சிங்கள ராணுவ முகாம் அமைத்து விட்டதும் முக்கியமான காரணம்.

கிளி நொச்சி பகுதியில் பரந்தன், துணுக்காய் மன்னார் மாவட்டத்தில் குயிலங்குளம், பரப்புக் கடந்தான் போன்ற இடங்களில் உள்ள புதிய சிங்கள ராணுவ முகாம்கள்



போராளிகள் நடமாட்டத்தைத் தடை செய்கிறது.

விசிட்டர்: கிழக்கு மாகாணத்தில் சிங்கள ராணுவத்தின் நிலை எப்படி உள்ளது?

சுரேஷ்: கிழக்கு மாகாணத்தில் முன்னணிப்படை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கம் தான். மட்டக் களப்பு, அம்பாரை பகுதிகளில் நாங்கள் மட்டுமே செயல்படுகின்றோம். எல்.டி.டி.ஈ கிழக்கு மாகாணத்தில் இருந்து பின் வாங்கி யாழ்குடா நாட்டிற்குள் வந்து விட்டது. கிழக்கு மாகாண மக்கள் ஆதரவும், எங்களுக்கு இருப்பதனால் சிங்கள ராணுவம் தாக்குதலில் பெரிய முனைப்புக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உங்கள் விசிட்டர்

**ஈழ விடுதலை அமைப்புகளில், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி(ஈ.பி.ஆர்.எல்.எப்)யும் ஒன்றாகும். இந்த அமைப்பு மக்கள் விடுதலைப் படை (பி.எல்.ஏ) என்ற ராணுவப் பிரிவின் மூலம் சிங்கள ராணுவத்தினை எதிர்த்துப் போராடி வருகின்றது. பி.எல்.ஏ ராணுவத்தின் தளபதி சுரேஷ். இவர் சமீபத்தில் சென்னை வந்திருந்தார். அவரை விசிட்டர் பேட்டி கண்டார்.**



***விசிட்டர்:*** *தனித்தனி அமைப்புக்களாக தளங்களில் நின்று சிங்கள ராணுவத்தை எதிர்த்துக் கொண்டிருக்கும் போராளிகளின் ராணுவ அமைப்புக்கள், ஒன்றுபட்டு சிங்கள ராணுவத்தை எதிர்க்க வேண்டிய தருணம் இதுதான். இந்தக் கருத்தில் உங்கள் (பி.எல்.ஏ) மக்கள் விடுதலைப் படையின் நிலை என்ன?*

***சுரேஷ்:*** ஈ.பி.ஆர்.எல்.எப்.ஐ பொறுத்தவரை குறைந்தபட்ச வேலைத் திட்டத்தின் அடிப்படையிலாவது அமைப்புக்களிடையே ஒற்றுமை உருவாக்க வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையில் தொடர்ந்து நாங்கள் ஒற்றுமைக்கு அழைப்பு விட்டே வந்திருக்கின்றோம். இயக்கங்களிடையேயும் ஒற்றுமை உருவாக வேண்டும் என்பதற்காக ஈ.பி.ஆர்.எல்.எப் கடந்த காலத்தில் இருந்தே முயன்று வருகிறது. எங்கள் இயக்கத்தின் மீது எல்.டி.டி.ஈ தாக்குதல்களைத் தொடர்ந்த பொழுது, இழப்புக்களை ஏற்படுத்திய போது கூட நாங்கள் பொறுமையை கடைப்பிடித்தே வந்திருப்பதும் இந்த அடிப்படையில்தான். அரசியல் ரீதியாகவும், ராணுவ ரீதியாகவும், டி.யு.எல்.எப் முதல் அனைத்து இயக்கங்களிடையேயும் ஒற்றுமை உருவாக வேண்டும் என்பதும் எங்கள் நிலை. ஒற்றுமை வலுப்படுவதன் மூலமே சிங்கள ராணுவத்தை விரட்ட இயலும் என்பதும் உண்மைதான்.

***விசிட்டர்:*** *சிங்கள ராணுவத்தின் மோசமான தாக்குதல் உங்கள் ராணுவத்தைச் சோர்வடையச் செய்தது உண்டா?*

***சுரேஷ்:*** லட்சியப்பற்றோடு, ஈழ மக்கள் விடுதலைக்காக நாங்கள் போராடுகின்றோம். எங்கள் எதிரியை எந்த நோக்கத்திற்காக எதிர்க்கின்றோம் என்பதை அரசியல் ரீதியாகவும் எங்கள் போராளிகள் உணர்ந்திருப்பதால் தளங்களில் நிற்கும் போது அவர்கள் எந்த சூழ்நிலையிலும் சோர்வடைவதில்லை. மாறாக மண்ணை நேசிப்பதனாலும், சுதந்திரக் காற்றை சுவாசிக்க விரும்புவதனாலும் உற்சாகமே ஏற்படுகிறது.

***விசிட்டர்:*** *உங்கள் ராணுவப் பிரிவில் இருக்கும் போராளிகளுக்கு அரசியல் பயிற்சியும் அளிக்கப்படுகிறதா?*

***சுரேஷ்:*** ஒரு போராளி இயக்கத்திற்கு வரும் தொடக்க காலம் தொட்டு அவருக்கு அரசியல் கல்வி அளிக்கப்படுகிறது. எந்த நோக்கத்திற்காக அவர்கள் ஆயுதங்களை எடுக்கிறார்கள் என்பதை முற்றிலுமாக அவர்கள் உணர்ந்த பிறகே அவர்களிடம் ஆயுதங்களை கொடுப்பதனால் தவறு செய்யும் வாய்ப்புகள் மிகவும் குறைகின்றது. எதிரி எவ்வளவு பலமுடையவனாக இருந்தாலும் இறுதி வெற்றி எங்களுக்கே என்ற நம்பிக்கை உணர்வும் அவர்களுக்கு ஏற்படுகிறது.

***விசிட்டர்:*** *ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ மக்கள் விடுதலை படை என்று செயல்படுகின்ற உங்களை 'ஈழ மக்களுக்கானவர்கள்' என்று எப்படிச் சொல்கிறீர்கள்?*

***சுரேஷ்:*** பல உதாரணங்களைக் கூற முடியும். குறிப்பாக கேட்பதானால், ஒரு சம்பவத்தைக் கூறுகின்றேன். வாசவிளான் என்ற இடத்தில் சிங்கள ராணுவம் முகாம் அமைத்து விட்டது. அந்தப் பகுதி மக்கள் சிங்கள ராணுவ முகாம் அருகில் போராளிகள் சென்ட்ரி போட வேண்டும் என்று முடிவு செய்திருக்கின்றார்கள். அந்தக் கிராமத்தில் உள்ள 90 குடும்பங்களும் ஒன்றாக எங்கள் ராணுவமே சென்ட்ரி போட வேண்டும் என்று முடிவு செய்து; அதை மனுவாக எழுதி எங்களிடம் கொடுத்துப் பாதுகாப்புத் தரக் கேட்டார்கள். எங்கள் ராணுவத்திற்கான உணவு, குடிநீர் போன்ற உதவிகளையும் அந்த மக்களே செய்து தந்தார்கள். மக்கள் கோரிக்கையை ஏற்று செயல்படும் இயக்கமும் ராணுவப் பிரிவும் எங்களுடையது என்று பலரும் கூறுவது இதன் அடிப்படையில் தான்.

***விசிட்டர்:*** *உங்கள ராணுவத்தை எதிர் நோக்கியுள்ள பிரச்னை என்ன?*

***சுரேஷ்:*** நன்கு பயிற்றுவிக்கப்பட்ட போராளிகளும், ஆயுதங்களும் உள்ள எங்கள் பி.எல்.ஏ ராணுவ பிரிவு தளங்களில் இரண்டு எதிரிகளை ஒரே நேரத்தில் சந்திக்க வேண்டி உள்ளது. நேர் எதிரில் சிங்கள ராணுவத்தை சந்திக்கும் எங்கள் போராளிகளை, மறைமுகமாக அழித்தொழிக்க எல்.டி.டி.ஈ ஆயுதங்களை தூக்கிக் கொண்டு வருகின்றது. யாழ்குடா நாட்டில் யாழ்ப்பாண நகரத்தை சுற்றி வளைத்து தாக்கிட, நாளுக்கு நாள் சிங்கள ராணுவம் முன்னேறி வருவது உண்மைதான். நெருக்கடியான இந்த





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# “இரண்டு எதிரிகளை எதிர்த்து போராடுகிறோம்.”

## –ஈ.பி.ஆர்.எல்.எப் ராணுவ தளபதி சுரேஷ் கூறுகின்றார்!

நேரத்தில் நாங்கள் மறைமுகமாக செயல்பட வேண்டி உள்ளது. இதற்குக் காரணம் மேற் சொன்ன விபரங்களே யாகும்.

*விசிட்டர்: உங்கள் பி.எல்.ஏ ராணுவத்தை முற்றாக எல்.டி.டி.ஈ முறியடித்து விட்டதாகக் கூறப்படுகிறதே?*

*சுரேஷ்:* உண்மைக்கு மாறாக தகவல்களை மக்கள் முன் வைப்பது என்பது எல்.டி.டி.ஈ இயக்கத்தின் பிரச்சார முறை. யாழ்குடா நாட்டில் நாங்கள் சிங்கள ராணுவத்தின் எதிரில் நின்ற பொழுது மறுபுறத்தில் எங்களைத் தாக்கி அழிக்க எல்.டி.டி.ஈ முயன்றது. ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. எங்கள் இயக்கத் தோழர்களில் சிலரை மட்டுமே சிறை பிடித்து விட்டார்கள்.

கொள்கைப் பிடிப்போடு, மக்கள் விடுதலையை நேசித்து உயர்ந்த எங்கள் இளைஞர்களை வைமன் ரோடில் உள்ள எல்.டி.டி.ஈ ராணுவ விசாரணை முகாமில் அடைத்து மிருகத்தனமான சித்ரவதை செய்து அவர்களைத் திரும்பவும் செயல்பட முடியாமல் சிதைத்து வெளியே அனுப்புகிறார்கள். கை, கால்களை சேதப்படுத்தி அவர்களால் வெளியே அனுப்பப்படும் போராளிகள் வெளிவந்த பிறகும் மிரட்டப்பட்டு வெளிநாடுகளுக்கு ஓடச் சொல்லி துன்புறுத்துகின்றார்கள்.

ஸ்ரீலங்கா அரசின் சித்திரவதை முகாமான பூசா முகாமிற்கு எந்த வகையிலும் குறைந்தது அல்ல எல்.டி.டி.ஈ இயக்கத்தின் சித்ரவதை முகாம் என்று எங்கள் மக்களே சொல்கிறார்கள்!

*விசிட்டர்: உங்களை(சுரேஷ்)க் கூட சிறை பிடித்து கொன்று விட்டதாக தகவல் ஒன்று வந்ததே?*

*சுரேஷ்:* எல்.டி.டி.ஈ தான் அப்படி அறிவித்தது. அதற்கு என்ன காரணம் என்று நானே கூறுகிறேன். டெலோ இயக்க வீரர்களை அழித்த பிறகு; அவர்களின் அடுத்த குறி நாங்கள் தான். டெலோ கிரிமினல் இயக்கம், எனவே அழித்தோம் என்றார்கள். எங்களை என்ன காரணம் சொல்லித் தாக்குவது என்ற நிலை ஏற்பட்ட பொழுது; அவர்களுக்கு காரணம் தேவைப்பட்டது. இந்திய அரசின் ஆதரவாளர்கள் நாங்கள் என்றார்கள். எங்களால் தான் பின்னடைவுகள் என்று கூறிப் பார்த்தார்கள்.

பிறகு என்னைச் சிறை பிடித்ததாகவும்; என்னை விசாரித்த பொழுது என்னிடமிருந்து ரகசிய கடிதங்கள் சிக்கியதாகவும், அந்தக் கடிதங்களில் நாங்கள் எல்.டி.டி.ஈ இயக்கத்தை அழிக்கப் போட்ட திட்டங்களும் தடயங்களும் சிக்கியதனால் அதன் அடிப்படையில் ஈ.பி.ஆர்.எல்.எப். இயக்கத்தை தாக்குகின்றோம். சுரேஷ் கொலை செய்யப்பட்டார் என்றார்கள். நான் உயிரோடு உங்கள் எதிரில் இருப்பது எவ்வளவு உண்மையோ; அதே போல் எங்கள் ராணுவ அமைப்பு செயல்படுவதும் உண்மையே!

*விசிட்டர்: சிங்கள ராணுவம் முன்னேறுவது குறித்து உங்கள் மதிப்பீடு என்ன?*

*சுரேஷ்:* எல்.டி.டி.ஈ பிற ராணுவ அமைப்புகளிடம் நடந்து கொண்ட அணுகுமுறை தான் களத்தில் முன்னேற்றத்திற்கு வழி வகுத்து விட்டது. நேரில் டெலோ இல்லை, பிளாட் இல்லை, ஈ.பி.ஆர்.எல்.எப் இல்லை. எனவே சிங்கள ராணுவத்திற்கு உண்மையான பயம் போய்; தனித்து நிற்கும் எல்.டி.டி.ஈ ராணுவத்தைத் தாக்கி அழித்து விடலாம் என்ற தைரியம் பிறந்து விட்டது.

பிற இயக்கங்களை நடமாட விடாமல் எல்.டி.டி.ஈ தடுத்ததனால் வவுனியா, முல்லைத் தீவு, கிளி நொச்சி, மன்னார் பகுதிகளை சுலபமாக சிங்கள ராணுவம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்து யாழ்ப்பாணத்தை நோக்கி முன்னேறுகிறது.

*விசிட்டர்: நெருக்கடியான நேரத்தில் மறைமுகமாகவாவது நீங்கள் சிங்கள ராணுவத்தை எதிர்க்கலாம் அல்லவா?*

*சுரேஷ்:* காரணம் சொல்லி தப்பிக்க விரும்பவில்லை. சில இடங்களில் நாங்களும் செயல்பட்டே (எதிர்த்தே) வருகிறோம். மும்முரமாக எங்கள் தாக்குதல் யாழ்குடா பகுதியில் இல்லை என்பது வரை சரி. பிற இயக்கங்களை எல்.டி.டி.ஈ தடுத்ததன் மூலம், போராளிகள் ராணுவங்கள் மூவ்மெண்ட்ஸைத் தடை செய்யும் வகையில் கேந்திரமான சில ராணுவ முகாம்களை சிங்கள ராணுவ முகாம் அமைத்து விட்டதும் முக்கியமான காரணம்.

கிளி நொச்சி பகுதியில் பரந்தன், துணுக்காய் மன்னார் மாவட்டத்தில் குயிலங்குளம், பரப்புக் கடந்தான் போன்ற இடங்களில் உள்ள புதிய சிங்கள ராணுவ முகாம்கள்




போராளிகள் நடமாட்டத்தைத் தடை செய்கிறது.

*விசிட்டர்: கிழக்கு மாகாணத்தில் சிங்கள ராணுவத்தின் நிலை எப்படி உள்ளது?*

*சுரேஷ்:* கிழக்கு மாகாணத்தில் முன்னணிப்படை ஈ.பி.ஆர்.எல்.எப் இயக்கம் தான். மட்டக் களப்பு, அம்பாரை பகுதிகளில் நாங்கள் மட்டுமே செயல்படுகின்றோம். எல்.டி.டி.ஈ கிழக்கு மாகாணத்தில் இருந்து பின் வாங்கி யாழ்குடா நாட்டிற்குள் வந்து விட்டது. கிழக்கு மாகாண மக்கள் ஆதரவும், எங்களுக்கு இருப்பதனால் சிங்கள ராணுவம் தாக்குதலில் பெரிய முனைப்புக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டாமல் இருந்து வருகின்றது.

**விசிட்டர்:** யாழ்குடா பகுதியில் உங்கள் ராணுவத்தின் பங்கேற்பு எந்த விதத்தில் இருந்தது? இருக்கிறது?

**சுரேஷ்:** யாழ்ப்பாணம், பலாலி, வாசவிளான், மண்டத்தீவு, நாவக்குழி, காரைநகர் கடற்படை முகாம் போன்ற இடங்களில் சிங்கள ராணுவத்தை மோட்டர் என்ற ஆயுதம் மூலமாக ஆரம்பத்தில் எதிர்த்து நின்றோம். ஆரம்ப காலங்களில் சிங்கள ராணுவத்தை வெளியே வர விடாமல் தடுத்ததில் பெரிய பங்கு எங்களுடையது தான். ப்ளாட் தோழர்கள் மக்களுக்கான பாதுகாப்பு அரண்களை அமைத்து; ராணுவம் வெளியே வரும் பொழுது சிக்னல் கொடுத்து; மக்கள் சிங்கள ராணுவத்தின் தாக்குதல் மூலமாக பாதிக்கப்படாமல் இருக்க பதுங்கு குழிகளை ஏற்படுத்தி செயல்பட்டார்கள். ப்ளாட் இயக்கத்தை எல்.டி.டி.ஈ தடை செய்ததனாலும், ஈ.பி.ஆர்.எல்.எப் ராணுவத்தை அழிக்க முற்பட்டதனாலும் நாங்கள் தளங்களை விட்டு மறைமுகமானோம். இதனால் சிங்கள ராணுவத்திற்கே லாபம் கிடைத்தது.

**விசிட்டர்:** நீங்கள் ஈழத்தில் இருந்து வருகை புரிந்துள்ளீர்கள் எல்.டி.டி.ஈ இயக்கத் தலைவர் பிரபாகரன் ஈழத்தில் இருக்கிறாரா அல்லது தமிழகம் திரும்பி விட்டாரா?

**சுரேஷ்:** பிரபாகரன் ஈழம் வந்தது உண்மை. ஆனால் அவர் மக்கள் மத்தியில் வரவே இல்லை. அவர் யாழ்ப்பாணம் வந்ததே தளபதி கிட்டுவிற்கும் அவருக்கும் இடையே உள்ள பிரச்னையைத் தீர்க்கத் தான்.

**விசிட்டர்:** கிட்டுவிற்கும் பிரபாகரனுக்கும் என்ன தகராறு?

**சுரேஷ்:** பிரபாகரனை விட தனது செல்வாக்கை யாழ்குடாவில் அதிகாரித்துக் கொள்ள கிட்டு முயற்சிக்கிறார் என்பதுதான். குறிப்பாக கிட்டு பொதுக் கூட்டங்கள் மூலம் ஈழ மக்களைச் சந்திப்பார். அந்தச் செய்திகள் பெரிதாக யாழ்ப்பாணம் பத்திரிகையில் வரும். ஏனென்றால் யாழ்ப்பாண பத்திரிகைகள் கிட்டு கட்டுப்பாட்டில் தான் உள்ளன. வெளிநாட்டு பத்திரிகைகள், டெலிவிஷன் என்று எங்கும், எதிலும், கிட்டுவே காட்சி தருவது வாடிக்கை!

வீடியோ பிரச்சாரம், எல்.டி.டி.ஈ.யின் தனி அலை வரிசை மூலம் டி.வி ஒளி பரப்பு போன்றவற்றிலும் கிட்டுவே பிரதானமாக காட்சியளிப்பார். மேலும் இலங்கை மந்திரிகள், சிங்கள ராணுவத் தலைவர்கள் சந்திப்பு, பேச்சு வார்த்தை என்று கிட்டுவின் பெயர் பிரபாகரனின் பெயரை விட பெரிதாக தோன்றும் வகையில் கிட்டு செயல்படுவதை தடுக்க பிரபாகரன் விரும்புவது ஒரு காரணமாகும்.

மேலும் யாழ்குடா பகுதியின் தளபதி கிட்டு, யாழ் நகரத்திற்கு பொறுப்பு தளபதி மேஜர் அருணா, ஆனால் ராணுவத்திலும் கிட்டுவின் ஆட்களே இன்று அதிகம் இருப்பதனால் பிரபாகரனை விட கிட்டுவிற்கே செல்வாக்கு இருப்பதும் பிரச்னைக்கு காரணமாகும். மேஜர் அருணாவைக் கூட எல்.டி.டி.ஈ ராணுப் பிரிவினர் மதிப்பது இல்லை என்றும் தெரிகிறது. கிட்டுவின் கை ஓங்கி விட்டது என்பதற்கு இவையெல்லாம் காரணங்களாகும்.

**விசிட்டர்:** கிட்டுவிற்கும் பிரபாகரனுக்கும் எவ்வித மோதலும் இல்லை. பொய் செய்தி தரப்படுகிறது என்று எல்.டி.டி.ஈ தரப்பில் கூறப்படுகிறதே?

**சுரேஷ்:** பிரபாகரன் யாழ்ப்பாணத்திற்கு வந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது. ஏன் இது வரை கிட்டுவும் பிரபாகரனும் சேர்ந்து ஈழ பத்திரிகையாளர்கள் முன் வந்து பேட்டி கொடுக்கவில்லை. எல்.டி.டி.ஈ கொடுக்கும் தகவல்களும், படங்களையும் தானே பத்திரிகைகள் வெளியிடுகின்றன. பத்திரிகைகள் எங்காவது இவர்களை ஒன்றாக சந்தித்து படம் எடுத்து ஏன் வெளியிட முடியவில்லை. நாங்கள் இப்படிக் கூறினால் பாதுகாப்பு காரணங்கள் என்பார்கள். யாழ்ப்பாணத்தில் எல்.டி.டி.ஈ.க்கு செல்வாக்கு அதிகம். எனவே அவர்கள் கூறும் காரணங்கள் தான் சரியானது அல்ல என்கிறேன்.

**விசிட்டர்:** உங்களை ஏன் எல்.டி.டி.ஈ குறி வைத்து தாக்குகிறது? அழிக்க முயல்கிறது?

**சுரேஷ்:** யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் அருணகிரிநாதன், விஜிதரன் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட பொழுது மாணவர்கள் விஜிதரனை கண்டு பிடிக்க கோரி போராளிகள் இயக்கங்களை நாடின. மாணவர் விஜிதரன் கடத்தப்பட்டதனால் பெரும் கொந்தளிப்பு எங்கள் மக்கள் மத்தியில் ஏற்பட்டது. பாதர் சிங்கராயரை சிங்கள அரசு கைது செய்த போது ஏற்பட்ட வெகுஜன ஆதரவு விசிதரன் கடத்தப்பட்ட பொழுதும் ஏற்பட்டது. பாத யாத்திரை, உண்ணா விரதம், மறியல், விளக்கக் கூட்டம் என்று போராட்டம் விரிவடைந்த பொழுது மக்கள் மேடையில் எங்கள் இயக்கத்தின் சார்பாக மாணவர்களுக்கு ஆதரவாக நான் பேசினேன். இப்படி மக்களுக்கு ஆதரவாக நாங்கள் நிற்கும் பொழுது அது எல்.டி.டி.ஈ.யை பாதிப்பதனால் எங்களை அழிக்க முற்படுகிறார்கள்.

**விசிட்டர்:** எல்.டி.டி.ஈ.க்கு எதிராக நீங்கள் கருத்து கூறுகிறீர்கள். யாழ்ப்பாண மக்கள் எந்தக் கருத்தும் கூறியதாக தகவல் இல்லையே?

**சுரேஷ்:** யாழ்ப்பாணம் மக்கள் எல்.டி.டி.ஈ இயக்கத்திற்கு எதிராக கருத்துக்களை கூறினால் அவர்களுக்கு 250 ரூபாய் அபராதமும், பச்சை பனை மட்டையினால் ஐந்து அடிகளும் கிடைக்கும்! அதனால்தான் யாழ்ப்பாண மக்கள் வாயே திறப்பதில்லை.

**விசிட்டர்:** ஒரு இயக்கத்தை மற்றொரு இயக்கத்தினர் இப்படி விமர்சிப்பதன் மூலம் ஐக்கிய முன்னணி உருவாக தடை ஏற்படாதா?

**சுரேஷ்:** எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரை பரவலாக யாழ்ப்பாண மக்களுக்குத் தெரிந்த சில விவரங்களைத்தான் குறிப்பிடுகின்றோம். எங்கள் போராளிகளில் ரீகன் உட்பட பலரை எல்.டி.டி.ஈ கொலை செய்த பொழுது கூட நாங்கள் பழிக்கு பழி என்று கிளம்பாமல் மௌனம் காத்ததற்குக் கூட ஒற்றுமை வேண்டும் என்பதற்காகத்தான். தவறான தகவல்களை எல்.டி.டி.ஈ பத்திரிகைகளுக்கு, மக்களுக்கு தரும் பொழுது விளக்கம் தரவே நாங்கள் செய்தி வெளியிடுகின்றோம். உண்மை எதுவோ அது கசப்பாகவும் இருப்பதற்கு காரணம் நாங்கள் அல்ல.

**விசிட்டர்:** யாழ்ப்பாணத்தைச் சுற்றி வளைத்து சிங்கள ராணுவம் பிடித்து விடும் என்பது சரியா?

**சுரேஷ்:** நடக்க முடியாத விஷயம். காரணம் இரண்டு. ஒன்று ஜன நெருக்கமுள்ள பகுதியில் நடக்கின்ற யுத்தம். இதில் யார் துப்பாக்கி உறுமினாலும் பொது மக்கள் பெரும் அளவில் பாதிக்கப்படுவார்கள். இரண்டாவது காரணம் இந்திய அரசு. இதுவரை தாக்குதல் நடந்த இடங்களும் முறைகளும் இந்தியாவிற்கு தெரியும். இனி நடக்க இருக்கும் இடங்களை பற்றியும், தன்மை, விளைவுகளையும் இந்தியா அறியும். பெரும் அளவில் பொது மக்கள் அழிந்தால் இந்தியா மௌனம் சாதிக்காது என்பது இலங்கைக்கும் தெரியும். எனவே, நெருக்கடி மட்டுமே நீடிக்கலாம்.

பேட்டி: எஸ். கோமதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காட்டாமல் இருந்து வருகின்றது.

*விசிட்டர்:* யாழ்குடா பகுதியில் உங்கள் ராணுவத்தின் பங்கேற்பு எந்த விதத்தில் இருந்தது? இருக்கிறது?

*சுரேஷ்:* யாழ்ப்பாணம், பலாலி, வாசவிளான், மண்டத்தீவு, நாவக்குழி, காரைநகர் கடற்படை முகாம் போன்ற இடங்களில் சிங்கள ராணுவத்தை மோட்டர் என்ற ஆயுதம் மூலமாக ஆரம்பத்தில் எதிர்த்து நின்றோம். ஆரம்ப காலங்களில் சிங்கள ராணுவத்தை வெளியே வர விடாமல் தடுத்ததில் பெரிய பங்கு எங்களுடையது தான். ப்ளாட் தோழர்கள் மக்களுக்கான பாதுகாப்பு அரண்களை அமைத்து; ராணுவம் வெளியே வரும் பொழுது சிக்னல் கொடுத்து; மக்கள் சிங்கள ராணுவத்தின் தாக்குதல் மூலமாக பாதிக்கப்படாமல் இருக்க பதுங்கு குழிகளை ஏற்படுத்தி செயல்பட்டார்கள். ப்ளாட் இயக்கத்தை எல்.டி.டி.ஈ தடை செய்ததனாலும், ஈ.பி.ஆர்.எல்.எப் ராணுவத்தை அழிக்க முற்பட்டதனாலும் நாங்கள் தளங்களை விட்டு மறைமுகமானோம். இதனால் சிங்கள ராணுவத்திற்கே லாபம் கிடைத்தது.

*விசிட்டர்:* நீங்கள் ஈழத்தில் இருந்து வருகை புரிந்துள்ளீர்கள் எல்.டி.டி.ஈ இயக்கத் தலைவர் பிரபாகரன் ஈழத்தில் இருக்கிறாரா அல்லது தமிழகம் திரும்பி விட்டாரா?

*சுரேஷ்:* பிரபாகரன் ஈழம் வந்தது உண்மை. ஆனால் அவர் மக்கள் மத்தியில் வரவே இல்லை. அவர் யாழ்ப்பாணம் வந்ததே தளபதி கிட்டுவிற்கும் அவருக்கும் இடையே உள்ள பிரச்னையைத் தீர்க்கத் தான்.

*விசிட்டர்:* கிட்டுவிற்கும் பிரபாகரனுக்கும் என்ன தகராறு?

*சுரேஷ்:* பிரபாகரனை விட தனது செல்வாக்கை யாழ்குடாவில் அதிகாரித்துக் கொள்ள கிட்டு முயற்சிக்கிறார் என்பதுதான். குறிப்பாக கிட்டு பொதுக் கூட்டங்கள் மூலம் ஈழ மக்களைச் சந்திப்பார். அந்தச் செய்திகள் பெரிதாக யாழ்ப்பாணம் பத்திரிகையில் வரும். ஏனென்றால் யாழ்ப்பாண பத்திரிகைகள் கிட்டு கட்டுப்பாட்டில் தான் உள்ளன. வெளிநாட்டு பத்திரிகைகள், டெலிவிஷன் என்று எங்கும், எதிலும், கிட்டுவே காட்சி தருவது வாடிக்கை!

வீடீயோ பிரச்சாரம், எல்.டி.டி.ஈ.யின் தனி அலை வரிசை மூலம் டி.வி ஒளி பரப்பு போன்றவற்றிலும் கிட்டுவே பிரதானமாக காட்சியளிப்பார். மேலும் இலங்கை மந்திரிகள், சிங்கள ராணுவத் தலைவர்கள் சந்திப்பு, பேச்சு வார்த்தை என்று கிட்டுவின் பெயர் பிரபாகரனின் பெயரை விட பெரிதாக தோன்றும் வகையில் கிட்டு செயல்படுவதை தடுக்க பிரபாகரன் விரும்புவது ஒரு காரணமாகும்.

மேலும் யாழ்குடா பகுதியின் தளபதி கிட்டு, யாழ் நகரத்திற்கு பொறுப்பு தளபதி மேஜர் அருணா, ஆனால் ராணுவத்திலும் கிட்டுவின் ஆட்களே இன்று அதிகம் இருப்பதனால் பிரபாகரனை விட கிட்டுவிற்கே செல்வாக்கு இருப்பதும் பிரச்னைக்கு காரணமாகும். மேஜர் அருணாவைக் கூட எல்.டி.டி.ஈ ராணுப் பிரிவினர் மதிப்பது இல்லை என்றும் தெரிகிறது. கிட்டுவின் கை ஓங்கி விட்டது என்பதற்கு இவையெல்லாம் காரணங்களாகும்.

*விசிட்டர்:* கிட்டுவிற்கும் பிரபாகரனுக்கும் எவ்வித மோதலும் இல்லை. பொய் செய்தி தரப்படுகிறது என்று எல்.டி.டி.ஈ தரப்பில் கூறப்படுகிறதே?

*சுரேஷ்:* பிரபாகரன் யாழ்ப்பாணத்திற்கு வந்து கிட்டத்தட்ட இரண்டு மாதங்கள் ஆகிவிட்டது. ஏன் இது வரை கிட்டுவும் பிரபாகரனும் சேர்ந்து ஈழ பத்திரிகையாளர்கள் முன் வந்து பேட்டி கொடுக்கவில்லை. எல்.டி.டி.ஈ கொடுக்கும் தகவல்களும், படங்களையும் தானே பத்திரிகைகள் வெளியிடுகின்றன. பத்திரிகைகள் எங்காவது இவர்களை ஒன்றாக சந்தித்து படம் எடுத்து ஏன் வெளியிட முடியவில்லை. நாங்கள் இப்படிக் கூறினால் பாதுகாப்பு காரணங்கள் என்பார்கள். யாழ்ப்பாணத்தில் எல்.டி.டி.ஈ.க்கு செல்வாக்கு அதிகம். எனவே அவர்கள் கூறும் காரணங்கள் தான் சரியானது அல்ல என்கிறேன்.

*விசிட்டர்:* உங்களை ஏன் எல்.டி.டி.ஈ குறி வைத்து தாக்குகிறது? அழிக்க முயல்கிறது?

*சுரேஷ்:* யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் அருணகிரிநாதன், விஜிதரன் கடத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட பொழுது மாணவர்கள் விஜிதரனை கண்டு பிடிக்க கோரி போராளிகள் இயக்கங்களை நாடின. மாணவர் விஜிதரன் கடத்தப்பட்டதனால் பெரும் கொந்தளிப்பு எங்கள் மக்கள் மத்தியில் ஏற்பட்டது. பாதர் சிங்கராயரை சிங்கள அரசு கைது செய்த போது ஏற்பட்ட வெகுஜன ஆதரவு விசிதரன் கடத்தப்பட்ட பொழுதும் ஏற்பட்டது. பாத யாத்திரை, உண்ணா விரதம், மறியல், விளக்கக் கூட்டம் என்று போராட்டம் விரிவடைந்த பொழுது மக்கள் மேடையில் எங்கள் இயக்கத்தின் சார்பாக மாணவர்களுக்கு ஆதரவாக நான் பேசினேன். இப்படி மக்களுக்கு ஆதரவாக நாங்கள் நிற்கும் பொழுது அது எல்.டி.டி.ஈ.யை பாதிப்பதனால் எங்களை அழிக்க முற்படுகிறார்கள்.

*விசிட்டர்:* எல்.டி.டி.ஈ.க்கு எதிராக நீங்கள் கருத்து கூறுகிறீர்கள். யாழ்ப்பாண மக்கள் எந்தக் கருத்தும் கூறியதாக தகவல் இல்லையே?

*சுரேஷ்:* யாழ்ப்பாணம் மக்கள் எல்.டி.டி.ஈ இயக்கத்திற்கு எதிராக கருத்துக்களை கூறினால் அவர்களுக்கு 250 ரூபாய் அபராதமும், பச்சை பனை மட்டையினால் ஐந்து அடிகளும் கிடைக்கும்! அதனால்தான் யாழ்ப்பாண மக்கள் வாயே திறப்பதில்லை.

*விசிட்டர்:* ஒரு இயக்கத்தை மற்றொரு இயக்கத்தினர் இப்படி விமர்சிப்பதன் மூலம் ஐக்கிய முன்னணி உருவாக தடை ஏற்படாதா?

*சுரேஷ்:* எங்கள் இயக்கத்தைப் பொறுத்தவரை பரவலாக யாழ்ப்பாண மக்களுக்குத் தெரிந்த சில விவரங்களைத்தான் குறிப்பிடுகின்றோம். எங்கள் போராளிகளில் ரீகன் உட்பட பலரை எல்.டி.டி.ஈ கொலை செய்த பொழுது கூட நாங்கள் பழிக்கு பழி என்று கிளம்பாமல் மௌனம் காத்ததற்குக் கூட ஒற்றுமை வேண்டும் என்பதற்காகத்தான். தவறான தகவல்களை எல்.டி.டி.ஈ பத்திரிகைகளுக்கு, மக்களுக்கு தரும் பொழுது விளக்கம் தரவே நாங்கள் செய்தி வெளியிடுகின்றோம். உண்மை எதுவோ அது கசப்பாகவும் இருப்பதற்கு காரணம் நாங்கள் அல்ல.

*விசிட்டர்:* யாழ்ப்பாணத்தைச் சுற்றி வளைத்து சிங்கள ராணுவம் பிடித்து விடும் என்பது சரியா?

*சுரேஷ்:* நடக்க முடியாத விஷயம். காரணம் இரண்டு. ஒன்று ஜன நெருக்கமுள்ள பகுதியில் நடக்கின்ற யுத்தம். இதில் யார் துப்பாக்கி உறுமினாலும் பொது மக்கள் பெரும் அளவில் பாதிக்கப்படுவார்கள். இரண்டாவது காரணம் இந்திய அரசு. இதுவரை தாக்குதல் நடந்த இடங்களும் முறைகளும் இந்தியாவிற்கு தெரியும். இனி நடக்க இருக்கும் இடங்களை பற்றியும், தன்மை, விளைவுகளையும் இந்தியா அறியும். பெரும் அளவில் பொது மக்கள் அழிந்தால் இந்தியா மௌனம் சாதிக்காது என்பது இலங்கைக்கும் தெரியும். எனவே, நெருக்கடி மட்டுமே நீடிக்கலாம்.

பேட்டி: எஸ். கோமதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்